"நாம்" இதைச் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்தப் பிரச்சினை எல்லோருக்கும் உரிய சமுதாயப் பிரச்சினை. 'உள்ளத்தால் ஒருவரே மற்றும் உடலினால் பலராய்க் காண்பார்' என்று புரட்சிக் கவிஞர் கூறியதைப்போல், நாம் உடல்களால் பலராக இருந்தாலுங்கூட, சமுதாய ஒற்றுமை, சமூக அநீதியைத் துடைத்தல் என்ற இந்தக் காரியத்தில் ஒரே உருவமாக இருந்து, இந்தப் பணியை ஆற்ற வேண்டும். அமைச்சரவைக் கூட்டத்திலே முடிவெடுத்துவிட்டோம். இங்கே பாராட்டுக்கள், நன்றிகள் குவிக்கப்பட்டுவிட்டன. அடுத்து, அங்கே தேர்தல் நடைபெற்றது, இந்த நான்கு தலைவர்களும் அங்கு வெற்றிபெற்று வந்தார்கள், அந்தத் தலைவர்களை அழைத்துச் சென்னையிலே நம்முடைய சர்வ கட்சி சார்பில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தினோம் என்ற அளவிற்கு, அது நிறைவுற வேண்டும்; அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லாக் கட்சித் தலைவர்களையும், இங்கே நன்றியுரை கூறியவர்களுக்கும், பாராட்டுரை கூறியவர்களுக்கும் அழைப்பு விடுத்து, ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி, இந்த அளவில் அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் பொறுங்கள். எல்லோரும் நன்றி சொல்லி இருக்கிறீர்கள். பேரவையின் சார்பாகவும், பேரவையின் தலைவர் என்ற முறையில் எனது சார்பாகவும் தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சமூக நீதியின்பால் அக்கறை கொண்ட மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தாழ்த்தப்பட்டோருக்கான உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமென்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய நான்கு ஊராட்சிகள் சுழற்சி முறையைப் பின்பற்றாமல், தனித் தொகுதிகளாகத் தொடர்ந்து நீடித்திருக்கும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு முதல்வருக்கு என் சார்பிலும், பேரவையின் சார்பிலும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2. தகவல் கோரல் – தொடர்ச்சி

(இ) பொள்ளாச்சி தொகுதி, சாலை விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு நிவாரணம்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

2006 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சொல்லுங்கள்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியிலே நடைபெற்ற மிகக் கொடுமையான சோகச் சம்பவம், கடந்த 16–8–2006 ஆம் நாளன்று விவசாயத் தொழிலாளர்கள் 25 பேர் ஒரு மினி ஆட்டோ மூலமாக இராமச்சந்திராபுரம் என்கிற கிராமத்திலேயிருந்து, அருகிலிருக்கும் ஒரு கிராமத்திற்கு விவசாயத் தொழில் செய்வதற்காகச் சென்றார்கள். சென்றவர்கள், எதிராக வந்த அரசுப் பேருந்து மோதியதன் விளைவாக 2 பேர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்திருக்கிறார்கள். மீதமுள்ள 23 பேரைக் கோவை, பொள்ளாச்சி மருத்துவமனைகளுக்கு எடுத்துச் சென்று, ஆபத்தான நிலையிலிருந்த 8 பேர் கோவை, அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். அதிலே ஒருவருக்கு ஒரு கை வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒருவருக்கும் ஒரு கையும், காலும் வெட்டியெடுக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. 2, 3 பேர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். பொள்ளாச்சி அரசு மருத்துவமனையிலே 15 பேர் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று, அவர்களுடைய இல்லங்களுக்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப் பாதிக்கப்பட்ட 25 விவசாயத் தொழிலாளர்களில் இறந்து போன இரண்டு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த குடும்பங்கள், கை கால்கள் வெட்டி எடுக்கப்பட்டவர்கள், கை, கால்கள் செயலிழந்த நிலையிலே உள்ளவர்களுக்கு, விபத்து நடந்து 11 நாட்களாகியும், இன்று வரையில் அரசின் சார்பாக எவ்வகையான உதவியும் செய்யப்படவில்லை. அவர்களுடைய ஈமக்கிரியையை நடத்துவதற்குக்கூட வட்டாட்சியர் அலுவலகத்திலேயிருந்து ஒரு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்கூட உதவித் தொகை வழங்கப்படவில்லை என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்கு ஈர்த்து, நம்முடைய தமிழக அரசு, நம்முடைய முதலமைச்சர், எங்களுடைய பொள்ளாச்சிப் பகுதியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, உயிரிழந்தவர்களுக்கு, கை, கால்களை இழந்தவர்களுக்கு, வெட்டி எடுக்கப்பட்டவர்களுக்குத் தக்க உதவிகளை வழங்க வேண்டுமென்று, நிவாரண உதவிகளை வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொள்ளாச்சி உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறியது உண்மையாக இருக்குமேயானால், அப்படி இதுவரையிலே உதவித் தொகை வழங்கப்படாமல் இருக்குமேயானால், காரணம் கேட்டு, நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு வழங்க வேண்டிய தொகையும் வழங்கப்படும். எனக்கு இதிலே சின்ன ஒரு ஆதங்கம். அவர்கள் ஏற்கெனவே அமைச்சராக எல்லாம் இருந்தவர்கள். 10 நாள், 11 நாளாக வழங்கப்படாமல் இருந்ததை ஒரு தந்திமூலம் அவர் தெரிவித்திருந்தால், உடனடியாக நாங்கள் இயங்கி இருப்போம் என்பதையும், அப்படித் தந்திமூலம் தெரிவிக்காமல், இந்த அவையிலே தெரிவித்த காரணத்தால், அதைச் செய்ய முடியாது என்றில்லாமல், எங்கே தெரிவித்தாலும், செய்தி கேள்விப்பட்டவுடன் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதிலே இந்த அரசு தயங்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், போதும், நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே தொலைபேசிமூலமாகவும், வட்டாட்சியரிடத்திலே தொலைபேசிமூலமாகவும் 16 ஆம் தேதியே தெரியப்படுத்தப்பட்டு, நானும் மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். மாவட்ட வருவாய் அலுவலர்—D.R.O. அவர்களும் மருத்துவமனைக்கு வந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜெயராமன், சொல்லியாகிவிட்டது அல்லவா? உங்கள் கோரிக்கை நிறைவேறிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) முதல்வர் பதில் சொன்னதற்குப் பிறகு, திரும்ப அதில் என்ன கேள்வி? உட்காருங்கள்.